புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2025** **15 ஆகஸ்ட் 2025**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை மற்றும் தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் சார்பில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு புதுச்சேரி கலை விழா இன்று (15.08.2025) தொடங்கியது. கடற்கரை சாலை காந்தி தொடரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் முரசு கொட்டி கலை விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந.ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு R.செல்வம், கலை பண்பாட்டுத்துறை செயலர் திரு முகமது ஆசன் அபித், சுற்றுலாத்துறை இயக்குனர் திரு முரளிதரன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வண்ணமயமான பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.